மூன்றாந் தவணைப் பரீட்சை – 2017

தரம் :- 12

ஐரோப்பிய வரலாறு

விடைகள்

பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 01) 5 | 02) 1 | 03) 5 | 04) 4 |
| 05) 3 | 06) 1 | 07) 2 | 08) 2 |
| 09) 4 | 10) 4 | 11) 4 | 12) 5 |
| 13) 4 | 14) 4 | 15) 5 | 16) 1 |
| 17) 2 | 18) 4 | 19) 3 | 20) 1 |
| 21) 5 | 22) 1 | 23) 4 | 24) 2 |
| 25) 1 | 26) 3 | 27) 4 | 28) 5 |
| 29) 5 | 30) 3 | 31) 4 | 32) 4 |
| 33) 3 | 34) 4 | 35) 3 | 36) 2 |
| 37) 1 | 38) 3 | 39) 5 | 40) 4 |

மூன்றாந் தவணைப் பரீட்சை – 2017

தரம் :- 12

ஐரோப்பிய வரலாறு

விடைகள்

பகுதி – II

01) சரியாக இடங்களைக் குறித்திருந்தால ஒவ்வொரு இடத்திற்கும் ஒரு புள்ளி வீதம் வழங்குக. அத்துடன் விளக்கக் குறிப்பிற்கு பொருத்தமான வகையில் சரியாக எழுதி இருந்தால் 5 புள்ளிகள் வழங்கவும்

02)

I. சமயம்

இயற்கைப் படைப்பிற்கு தெய்வ அந்தஸ்த்தை வழங்குதல்,

சியுஸ் தெய்வத்தை தலைமை தெய்வமாகவும் ஏனையவற்றை அதன் குடும்ப உறுப்பினர்களாகவும் கருதியமை,

பல தெய்வ வணக்கம் நிலவியமை,

சுதந்திர சிந்தனைக்கு இடையூராக இருக்கவில்லை,

சமயத் தலைவர்களின் ஆதிக்கம் காணப்பட்டமை,

சமய ஒற்றுமை நிலவியமை

II. இலக்கியம்

கவிதை, உரை நடை என்ற வகையில் இடம்பெற்றமை,

வீரகாவியம், ஹோமரின் இலியட், ஒடிசி,

ஹெரடோரஸ் எழுதிய வரலாற்று நூல்,

அரிஸ்டோட்டில், தூசிடைட்ஸ்உரை நடை எழுத்தாளர்களாக இருந்தமை,

ஈஸ்கிலஸ், சோபோக்ளஸ், யுரபீடிஸ், எரிடோபெனிஸ் என்போர் நாடக எழுத்தாளர்களாக இருந்தமை,

சிறந்த நாடகங்களையும் எழுதியமை

III. தத்துவம்

மிலேட்டல் நகரில் வாழ்ந்த தேலிஸ், அனெக்ஸிமெண்டர், சுனெக்ஸி மீனஸின் தத்துவம்,

பின்னர் சோக்கிரட்டீஸ், பிளேட்டோ, அரிஸ்டோட்டில் இதில் அதிக ஆர்வம் செலுத்தியமை,

ஈரக்ளிதீஸ் - அனைத்தும் மாறக்கூடியது, அக்கினி நிலையானது,

பார்மெனதீஸ் எல்லாவற்றிலும் மேலான பரம்பொருள் ஒன்று உண்டு,

பைதகரஸின் எண் கணித விதிகள் புவி உருண்டை எனக் கூறினான்

IV. கட்டிடக்கலை

கருங்கல் மற்றும் பளிங்குக் கற்களைக் கொண்டு கட்டிடங்கள் அமைக்கபட்டன,

தெய்வ வழிபாட்டுக்கான  கட்டடங்கள் பளிங்குக் கல்லால் அமைக்கப்பட்டிருந்தன,- உதாரணம் பாதினன் தேவாலயம்,

சாதாரண மக்களின் வீடுகள் மண், மற்றும் மரத்தைக் கொண்டு அமைக்கப்பட்டிருந்தன,

நிலா முற்றம் வைத்து வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன,

ஒவ்வொரு வீடும் சகல அம்சங்களையும் கொண்டதாக அமைக்கப்பட்டிருந்தது.

03)

I. கலை மற்றும் கட்டடக்கலை

கலைப்படைப்புக்களுக்கு செல்வந்தர்களின் ஆதரவு கிடைத்தமை,

கலைஞர்கள் சுயாதீனமாக செயற்பட வழி பிறந்தது,

புலன் இன்பங்களிற்கு ரசனை ஏற்படுத்தும் வகையில் கலைப்படைப்புக்கள் தோற்றம் பெற்றன,

சமயச் சார்பற்ற உலகியல் தன்மை கொண்டதாக இருந்தன.

பாரிய கட்டடங்கள் அமைக்கப்பட்டன,

கூரிய ஒடுங்கிய நிலையில் அமைக்கப்பட்ட மத்தியகால கட்டிடக்கலை மரபில் இருந்து மாற்றமடைந்தன,

குறிப்பாக சமய வழிபாட்டு இடங்கள் இந்த வகையில் அமைக்கப்பட்டிருந்தது,

வளைந்து (வில் வளைவு), கும்மாடம் கொண்டதாக இருந்தன.

II. புதிய விஞ்ஞானக் கருத்துக்கள் வளர்ச்சியடைந்தன,
புவி தட்டையானது என்ற கருத்து மாறி கோளவடிவமானது என்ற கருத்து வலுப்பெற்றது,
சூரியனைச் சுற்றி ஏனைய கோள்கள் வலம் வருகின்றன என்ற சிந்தனை,
நிகலஸ் கொப்பர்நிக்கஸ், கலிலியோ கலிலி, ஜொஹன்னஸ் கெப்லர் போன்றோரின் கண்டுபிடிப்புக்கள்,
ஐசக் நியூட்டனின் புவியீர்ப்புக் கொள்கை,
பரசல்ஸ், வில்லியம் ஹார்வே போன்றவர்களின் குருதிச் சுற்றோட்டத் தொகுதி,
திசையறிகருவி

III. மானிய முறையிலான அரசாட்சி வீழ்ச்சியடைந்தன,
பிரபுக்களின் அதிகாரம் குறைந்தன,
அரசனின் அதிகாரம் வளர்ச்சியடைந்தன,
வர்த்தகத்தில் ஈடுபட்ட செல்வந்தர்கள் அரசியலில் பங்குபற்றத் தலைப்பட்டனர்,
அரசனின் படை பயன்படுத்தப்பட்டது பிரபுக்களின் படைகள் இரத்துச் செய்யப்பட்டன,
நாடுகாண பயணங்களிற்கு ஆதரவளித்தனர்,
வர்த்தக நடவடிக்கைகளிற்கு உதவி வழங்கினர்

04)

I. ஸ்பானியா, பிரித்தானியா, பிரான்ஸ்

II. ஸ்பானியா – பேர்டினனட், இசபெலா, V சால்ஸ்
பிரித்தானியா – VII ஹென்றி, VIIIம் ஹென்றி
பிரான்ஸ் - 1ம் பிரான்சிஸ், IVம் ஹென்றி, XIII ம் லுவி, XIV ம் லுவி

III. நிலையான தேச எல்லைகளைக் கொண்டிருந்தன,
ஒரே இன மக்களையும், அரசரையும் கொண்டிருந்தன,
நிலையான இராணுவம்,
வர்த்தக விருத்தி பணம் படைத்தவர்களின் ஆதரவு,
அதிகாரம் அரசனிடம் குவிக்கப்பட்ட ஆட்சி,
பிரதானிகள் அதிகாரம் குறைக்கப்பட்டிருத்தல்

IV. மானிய முறையிலான அரசாட்சி வீழ்ச்சி கண்டு அதிகாரம் குவிக்கப்பட்ட அரசனின் ஆட்சி வலுப்பெற்றமை,
பிரதானிகளின் அதிகாரம் குறைந்தமையால் அரசனின் அதிகாரம் அதிகரித்தது,
பிரதானிகளின் நீதித்துறை அதிகாரம் குறைக்கப்பட்டது,
பிரதானிகள் பெற்றிருந்த உயர் பதவிகள் மத்திய வகுப்பாளரிற்கு வழங்கப்பட்டது,
முழு நாட்டிற்கும் ஒரே வகையான நீதி,

மதகுருமாரின தலையீடு குறைக்கப்ட்டது,
பொருளாதாரம் எழுச்சியடைந்தமை,
நாடுகாண் பயணங்களில் ஈடுபட்டமை,
குடியேற்ற நாடுகள் தோன்றின

05) 1453 ம் ஆண்டுக்கு முன்னர் கொன்ஸ்தாந்து நோபிளை கைப்பற்றியமை,
இதனால் கிழக்குப் பகுதிக்கான வியாபாரம் தடைப்பட்டமை,
இதனால் மாற்று வழிகளைத் தேடுவதற்கு ஐரோப்பியர் ஆர்வம் காட்டினர்,
தேசிய அரசுகளின் அரசர்கள் ஆதரவு வழங்கினர்,
போர்த்துக்கல்லின் கடலோடி ஹென்றி கடற் பயிற்சி முகாம் ஒன்றை நிறுவி பயிற்சியளித்தமை,
கத்தோலிக்க சமயத்தைப் பரப்ப வேண்டும் என்ற ஆர்வம்,
பார்த்தலோமியஸ் டயஸ், வாஸ்கொடகாமா ஆகியோரின் முயற்சியால் கிழக்கிற்கான பாதை கண்டு பிடிக்கப்பட்டமை, (இந்தியா)
பேர்டினன்ட், இசபெலா தம்பதிகளின் ஆதரவு,
கொலம்பஸ் அமெரிக்காவுக்கான பாதை கண்டுபிடிப்பு,
அமெரிக்கோ வெஷிபுஷி – மத்திய அமெரிக்கா,
மகலன் - உலகைச் சுற்றி வலம் வருதல்,
இதன் மூலம் உலகில் ஏனைய நாடுகள் கண்டுபிடிக்கப்பட்டது அவற்றினை தமது குடியேற்ற நாடுகளாக மாற்றினர்.

06) 1618 – 1648ம் ஆண்டு வரை 30 வருடமாக ஜேர்மனியில் இடம்பெற்ற யுத்தத்தினை 30 ஆண்டுப் போர் எனக் குறிப்பிடுவர்,
புரட்டஸ்தாந்து – கத்தோலிக்கம் ஆகிய சமயப் பிரிவுகளுக்கிடையே இது இடம்பெற்றது,
இப்போரிற்கான பிரதான காரணம் 1555 ம் ஆண்டு ஒக்ஸ்பர்க் மாநாட்டின் குறைபாடாகும்,
புரட்டஸ்தாந்து சமயப்பிரிவினர் கத்தோலிக்க சமயப் பிரிவினரின் புறம்பான இரு அணிகளாக பிரிந்து செயற்பட்டனர்,
பரிசுத்த உரோமப் பேரரசர் தமது பலத்தை மேம்படுத்த முயற்சித்ததை ஜேர்மனிய இளவரசர்கள் எதிர்த்தனர்,
பொஹிமியாவில் இடம்பெற்ற ஒரு சம்பவம் இப்போரைத் தொடக்கி வைத்தது,
டென்மார்க், சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் இதில் பங்கு கொண்டன,
ஹப்ஸ்பர்க் - பூர்போன் வம்சத்தவர்களுக்கிடையிலான போட்டியும் இப்போரிற்கான காரணியாகும்,
1648 ம் ஆண்டு வெஸ்ட்பேலியா ஒப்பந்தத்தின் மூலம் இது நிறைவு பெற்றது,
சமயத் தலையீடுகள் இன்றி அரசாட்சி செய்வதற்கான சந்தர்ப்பம் அரசுகளிற்குக் கிடைத்தமை ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

07)

I. 1555 ம் ஆண்டு இடம்பெற்றது,

கத்தோலிக்க புரட்டஸ்தாந்து சமயங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன,
கல்வினிய சமயம் புறக்கணிக்கப்பட்டமை,
1552ம் ஆண்டுக்கு முன்னர் புரட்டஸ்தாந்து சமயத்தை ஏற்றவர்களின் சொத்துக்கள் இவ்வாறு இருக்க அதன் பின்னர் ஏற்றவர்களின் சொத்துக்கள் பரிமுதல் செய்யப்பட்டன.

II. 1815ம் ஆண்டு வியன்னாவில் இடம் பெற்றது,
நெப்போலியனால் சிதைக்கப்பட்ட ஐரோப்பாவின் எல்லைகளை சீரமைப்பதை இது பிரதானமாகக் கொண்டிருந்தது,
லிபரல்வாத சிந்தனைகளைக் கட்டுப்படுத்தல்,
பாதிக்கப்பட்ட நாடுகளிற்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுக் கொடுத்தல்,

III. அரசியல் துறையில் செய்த சீர்திருத்தம்,
சமயத் துறையில் செய்த சீர்திருத்தம்,
கல்வித் துறையில் செய்த சீர்திருத்தம்,
நீதித்துறையில் செய்த சீர்திருத்தம்

IV. இத்தாலியில் பிறந்தவர்,
சித்திரம், சிறபக்கலையில் தேர்ச்சி பெற்றவர்,
குறிப்பாக சிறபக்கலையில் அதிக ஆர்வமிக்கவர்,
இத்தாலியின் புனித பேதுறு ஆலயத்தில் இவரது படைப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

08)

I. 1789 ம் ஆண்டு (175) ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படாமை

II. மானியமுறை சமூக அமைப்பு,
அரசன், பிரபுக்கள், மதகுருக்கள் உயர் வகுப்பினர்,
சாதாரண மக்கள் கீழ் மட்டத்திலும் கணிக்கப்பட்டனர்,
வர்த்தகம் வளர்ச்சி குன்றி இருந்தது,
அதிகமான வரிகள வசூலிக்கப்பட்டன,
92%மான வரிகள் மக்கள் 8%மான உயர் குலத்தவர்களுக்கு கட்டுப்பட்டு வாழ்ந்தனர்.

III. 1789 ஸ்டேட் ஜெனரல் கூட்டப்பட்டமை,
பஸ்ரில் சிறைச்சாலை உடைக்கப்பட்டமை,
1789 டெனிஸ் மைதான ஒப்பந்தம்,
நாடு முழுவதும் கிளர்ச்சி பரவியமை,
1792 ம் ஆண்டு 18ம் லூயி கொலை செய்யப்பட்டமை,
1792 – 1795 காலப்பகுதிகளில் கிரண்டின், ஜெகபின் குழுவினருக்கிடையில் மோதல்கள் இடம்பெற்று அச்சம் நிலவியமை,
1795 பணிப்பாளர் குழு ஆட்சி ஏற்படுத்தப்பட்டமை

IV. மானிய முறைப் பண்புகள் இல்லாமல் செய்யப்பட்டது,
சர்வாதிகார அரசாட்சி நீக்கப்பட்டது,
மனித உரிமைகள் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது,
வர்த்தக, கைத்தொழில் துறைகள் வளர்ச்சி கண்டது,
தனிமனித உரிமைகள் சுதந்திரங்கள் மதிக்கப்பட்டன,
மக்களாட்சி முறை வலுப்பெற்றது,
புதிய அரசியல் சித்தாத்தங்கள் தோற்றம் பெற்றன

09) 1870 ம் ஆண்டு இத்தாலிய ஐக்கியம் ஏற்பட்டது,

அதற்கான அத்திவாரம் நெப்போலியனின் ஆக்கிரமிப்பு காலத்திலிருந்து உருவானது,

1815ம் ஆண்டு வியன்னா மாநாடு 8 பகுதிகளாக இத்தாலியைச் சுருக்கியது,

மசினி, கழரி, கரிபால்டி போன்றவர்களின் பணி காரணமாக இத்தாலிய ஐக்கியம் ஏற்பட்டது,

விக்டர் இமானுவேல் மன்னன் (சாடினியா) தலைமையேற்று செயற்பட்டான்,

வட இத்தாலியப் பகுதிகள் பிரான்சின் ஆதரவுடன் இணைக்கப்பட்டன,

மத்திய இத்தாலியப் பகுதிகள் மக்கள் ஆதரவுடன் இணைக்கப்பட்டது,

சிசிலி, நேபிள்ஸ் கரிபால்டியின் ஆதரவுடன் இணைக்கப்பட்டன,

வெனிஸ், உரோம் பிஸ்மார்க்கின் ஆதரவுடன் இணைக்கப்பட்டன.